பக்கங்கள்: 12 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 06 வியாழக்கிழமை 19.03.2020 | கதிர் 02

# தேசியப் பட்டியலில் அம்பிகா!



## அவரே தன் வாயால் தகவல்

கொழும்பு, மார்ச் 19

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமை குறித்து மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் சட்ட நிபுணருமான அம்பிகா சற்குணநாதன் விளக்கமளித்துள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் தனது பெயர் இடம்பெற்றுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பக்கம் 11

## 3 மாணவர்களுக்கும் கொரோனா பாதிப்பு

கொழும்பு, மார்ச் 19

இலங்கையில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 3 பாடசாலை மாணவர்களும் உள்ளனர்.

தற்போது அங்கொடை ஐ.டி.எச் வைத்தியசாலையில் இவர்கள் சிகிச்சை பெற்று வருகிறனர்.

பக்கம் 11

# தேர்தலை ஒத்திவைக்க தயாராகிறது ஆணையம்

## கோட்டாபயவுடன் நாளை முக்கிய ஆலோசனை

கொழும்பு, மார்ச் 19

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் பணி சற்றுமுன்னர் பூர்த்தியடைந்துள்ள நிலையில், தேர்தலை மூன்று வாரங்கள் முதல் ஒரு மாதம் வரை ஒத்திவைப்பதற்கான ஆயத்தங்களில் சுயாதீனத் தேர்தல் ஆணையம் தயாராகி வருகின்றது.

நாளை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் இடையில் நடைபெறும் முக்கிய கலந்தாலோசனைச் சந்திப்பின் போது இது தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பக்கம் 11

## ரத்ன தேரரின் அணியில் களமிறங்கும் ஞானசாரர்



அத்துரலிய ரத்ன தேரர் தலைமையிலான 'எமது மக்கள் சக்தி' கட்சியின் கொடிச் சின்னத்தின் கீழ் பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்

பக்கம் 11



# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவம்: மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல்







முல்லைத்தீவு,மார்ச்.19

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் நீடிப்பதால் இம்முறை முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவத்தை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று காலை நடைபெற்றது.

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம் வருடாந்தம் மிகவும் சிறப்புற இடம் பெறுவதும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருவதும் வழமை.

உலக நாடுகளை அச்சுறுத்தி வருகின்ற கொரோனா வைரஸினுடைய தாக்கம் இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்ற நிலையில் அரச விடுமுறைகள் வழங்கப்பட்டு பொது மக்கள் கூடுவதற்கான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்தப் பங்குனித் திங்கள் உற்சவத்தில் மக்கள் ஒன்று கூடும் நிலையை தடுக்கும் முகமாக இது தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினருக்கும் மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று காலை இடம் பெற்றது

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்,அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் மற்றும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலைவர் முருகேசு குகதாசன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## சுற்றுலா செல்வோரின் வாகனங்கள் பறிமுதல்!

கொழும்பு, மார்ச் 19

அனைத்து பொலிஸ் நிலைய எல்லை பகுதிக்குள்ளும் ஆகக் குறைந்தது 2 சோதனைச்சாவடிகள் அமைக்கப்படும். பொலிஸ்மா அதிபர் இதற்கான உத்தரவை சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக சுற்றுலாப் பயணங்கள் போன்றவற்றுக்கான பஸ்களுக்கு அனுமதி வழங்கவேண்டாம் என்று பயணிகள் போக்குவரத்துப் பிரிவினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளோம். இதனை மீறிச் செயற்படும் பஸ்கள் மற்றும் வாகனங்கள் பொலிஸாரினால் பொறுப்பேற்கப்படும். இந்த பஸ்களுக்கான அனுமதிப்பத்திரங்களையும் சட்ட விதிகளுக்கு அமைவாக நிரந்தரமாக இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் – என்றார். (ஐ)

## சாதாரணதரப் பெறுபேறு வெளியிடுவதில் தாமதம்!

கொழும்பு, மார்ச் 19

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு வெளியிடுவதில் தாமதம் ஏற்படக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சைகள் திணைக்களத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பெறுபேறுகள் 28 ஆம் திகதி வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், அரசு அறிவித்துள்ள விசேட விடுமுறை காரணமாக பெறுபேறுகளை வெளியிடுவதில் கால தாமதம் ஏற்படக்கூடும் எனப் பரீட்சைத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களின் விசாக்களை நீடித்துக் கொடுக்க அரசு முயற்சி!

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ளதையடுத்து பல நாடுகள் முடங்கிப் போயுள்ளன. இதனையடுத்து பல இலங்கையர்கள் வெளிநாடுகளில் தவித்து வருகின்றார்கள். சிலரின் விசா காலம் முடிவடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் வீசா காலத்தை நீடிப்பது தொடர்பில், அவதானம் செலுத்துமாறு, வெளிநாடுகளின் தூதுவர்களிடம் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் தூதுவர்களுக்கும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குவணர்தனவுக்கும் இடையில்நேற்றுவிசேடசந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் விசா காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு, இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்களிடம் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பில் தங்களது நாடுகளின் அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக வெளிநாடுகளின் தூதுவர்கள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, தற்போது இலங்கையில் உள்ள வெளிநாட்டவர்களின் விஸா காலத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

## வெளிநாடுகளிலுள்ள இலங்கையரின் விஸாக்களை நீடிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 19

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் விஸாக்களை நீடிக்குமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்குலக நாடுகளின் தூதுவர்களை நேற்று புதன்கிழமை சந்தித்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத்த ஆரியசிங்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதன்போது நாட்டிலுள்ள வெளிநாட்டவர்களின் விஸா காலத்தை நீடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பில் தூதுவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் கண்காணிப்பு மத்திய நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களின் நிலை தொடர்பிலும் அவர்கள் நாடு திரும்புவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் தொடர்பிலும் இந்த சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 70 அடி பள்ளத்தில் விழுந்த ஓட்டோ



கொழும்பு, மார்ச் 19

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலப்பிட்டி தெகிந்தர பிரதான வீதியில் பிரதான வீதியில் அதிக வேகமாக வந்த ஓட்டோ வீதியை விட்டு விலகி 70 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று மாலை இடம்பெற்ற தாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவலப்பிட்டியில் இருந்து தெகிந்தர நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி அதிக வேகம் காரணமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் நாவலப்பிட்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் நாவலப்பிட்டிப் பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# முல்லைத்தீவில் நேற்று கொரோனா விழிப்புணர்வு





கொரோனா வைரஸ் நோயிலிருந்து எவ்வாறு எம்மை பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட சித்த மருத்துமனையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட ஆயுள்வேத ஒருங்கிணைப்பாளரும் மாவட்ட சித்த மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகருமாகிய வைத்திய கலாநிதி ஆர்.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்பூட்டல் கருத்தமர்வில் மாவட்டத்தின் ஏனைய ச வைத்தியர்களும் பங்கேற்று சிறப்பித்தனர். .

மருத்துவமனையின் நுழைவாயிலில் கருத்தமர்வுக்கு வருகின்றவர்கள் சவர்க்காரமிட்டு கை கழுவும் செயற்பாடும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வீட்டிற்குள் நுழையும் முன் நாம் அனைவரும் நன்றாக சவர்க்காரமிட்டு கை,கால்,முகம்கழுவுதலுடன் தொடர்பான தனிநபர் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு வழங் கப்பட்டது.

எமது பாரம்பரிய உணவுப்பழக்கங்கள் கலாச்சாரம் என்பவற்றை பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எம்மை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்ற விழிப்புணர்வு கருத்தினை சித்தமருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் வழங்கினார்.

மாவட்ட சித்த மருத்துவமனைக்கு வருகை தந்த அனைவருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த நில வேம்பு கசாயம் இலவசமாக வழங்கப்பட்டது. இந்த நிலவேம்பு கசாயமமானது தினமும் காலையில் இலவசமாக வழங்கப்படும் எனவும் இதனைப் பெற்று அனைவரும் பயன்பெறுமாறு மருத்துவ அத்தியட்சகர் கேட்டுக்கொண்டார். (ஐ)

# டக்ளஸ் இன்று வேட்புமனு




யாழ்ப்பாணம், மார்ச் 19

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்கள் இன்று வியாழக்கிழமை வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

இலங்கையின் பிரதான கட்சிகள் பல நேற்று வேட்பு மனு தாக்கல் செய்திருந்த நிலையில், இன்று காலை யாழ். மாவட்ட செயலக தேர்தல்தெரிவத்தாட்சிஅலுவலகத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இதன்போது வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா உள்ளிட்ட பல ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

வேட்பு மனு தாக்கலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எனும் தமது கட்சிக்கொள்கைக்கு அமைவாக தாம் யாழில் வீணைச் சின்னத்தில் தனித்து போட்டியிடுவதாகத் தெரிவித்தார். (ஐ)

# 4 நாள் சிசு உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 19

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட 4 நாள்களேயான சிசுவொன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

துன்னாலை மேற்கு, கரவெட்டி பகுதியைச் சேர்ந்த சிவனேசன், புவனேஸ்வரி தம்பதிக்கு, 13ஆம் திகதியன்று குழந்தை பிறந்துள்ளது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை குழந்தைக்கு உடல் நிலை சரியில்லையென மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மாற்றப்பட்டது.

எனினும், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 'ஓ' வகை இரத்தம் கொண்டவர்களுக்கு கொரோனா வைரஸ் எதிர்ப்பு அதிகமாம்

*கொழும்பு, மார்ச் 19*

*கொரோனா வைரஸால் 'A' வகை ரத்தம் உள்ளவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும், 'O' வகை இரத்தம் கொண்டவர்கள் கொரோனா வைரஸை எதிர்க்கும் வல்லமை கொண்டவர்கள் எனவும் சீனா நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.*

*சீன ஆய்வாளர்கள் வுஹானில் உள்ள 2 மருத்துவமனைகளிலும், ஷென்சென் நகரில் உள்ள ஒரு மருத்துவமனையிலும் ஆய்வை நடத்தினர்.*

*இரத்த வகைகளை வைத்து SARS - CoV - 2 பரிசோதனையைப் பயன்படுத்தி 2,173 நோயாளிகளின் இரத்த வகைகளை வைத்து 3,694 இற்கும் மேற்பட்ட ஆரோக்கியமானமக்களுடன் கொரோனா வைரஸ் நேர்மறை ஆய்வு செய்யப்பட்டு ஒப்பிடப்பட்டது.*

*ஆய்வின்படி, வுஹான் ஜின்யின்டன் மருத்துவமனையில் ஆய்வு செய்யப்பட்ட 1,775 நோயாளிகளில், 37.75 % பேர் 'A' வகை இரத்த வகைகளையும், 9.10 % பேர் 'O' வகை இரத்த வகையையும் கொண்டுள்ளனர்.*

*கொரோனா வைரஸால் 'A' வகை இரத்தம் கொண்டவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 'O' வகை இரத்தம் கொண்டவர்கள் குறைந்த அளவிலே பாதிக்கப்பட்டுள்ளனர் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அந்த மருத்துவமனையில் வைரஸால் இறந்த 206 பேரில் 41.26% பேர் 'A' வகை இரத்தம் கொண்டுள்ளதாகவும், 25% சதவீதம் பேர் 'O' வகை இரத்த கொண்டுள்ளவர்கள் எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.*

*இதற்காக, 'A' வகை இரத்தம் கொண்டவர்கள் பீதி அடையத் தேவையில்லை எனவும், 'O' வகை இரத்தம் கொண்டவர்கள் பாதுகாப்பானவர்களாக இருக்கிறார்கள் என அர்த்தமில்லை என்றும் தியான் ஜின் ஆராய்ச்சியாளர் காவ் யிங்டாய் கூறியுள்ளார்.*

# சாந்தபுரம் பாடசாலைக்கு இரண்டு மாடிக் கட்டடம்

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி – சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியில், இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

நீண்ட காலமாக போதிய வகுப்பறை வசதிகளின்றி காணப்பட்ட பாடசாலைக்கு, கடந்த காலங்களில் வகுப்பறை கட்டடத்துக்கான எந்த நிதியும் ஒதுக்கப்படாத நிலையில், பாடசாலை அபிவிருத்திக் குழுவானது, நேரடியாக அதிபர் பெ. கணேசன் தலைமையில், வடக்கு மாகாணப் பிரதமச் செயலாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அவைமாக, அவரால் மாகாணம் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ், ஒரு கோடி 89 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, தற்போது பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டு ஓகஸ்ட் 21ஆம் திகதியன்று, புதிய இரண்டு மாடிக் கட்டடத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பாடசாலையின் அதிபர் பெ. கணேசன் தெரிவித்தார்.

சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் வளப் பற்றாக்குறைகளைத் தீர்ப்பதில், எவரும் போதிய அக்கறை காட்டாத நிலையில், பாடசாலை அபிவிருத்திக் குழுவும் பாடசாலைக் கல்விச் சமூகமும் இணைந்து இவ்வாறு பல பணிகளை மேற்கொண்டுவருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சட்டம் எனும் இரும்புச் சட்டகம்

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைய ஒரு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. அதனை சட்டத்தின் பிரகாரம் நடத்தி முடிக்க வேண்டியது தேர்தல் ஆணையகத்தினதும், அரசினதும் – ஏன் பொது மக்களினதும் – கடமையும் பொறுப்புமாகும்.

ஆனால், அதற்காக எல்லா விடயங்களையும் சட்டத்தின் கண்கொண்டு மட்டும்தான் பார்க்க வேண்டும் என்பதல்ல. சட்டம் கூட அப்படி எதிர்பார்ப்பதில்லை.

சட்டமே தனக்குத் தானே கைவிலங்கு போட்டுக் கொண்டு – அல்லது சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு – வாளாவிருக்கையில் அந்தச் சட்டத்திற்கு அமைய செயற்பட்டேயாக வேண்டும் என வீம்பு பிடிப்பது அர்த்தமற்றது: அபத்தமானது.

இப்போது நாட்டை 'கொரோனா வைரஸ்' என்ற பேரிடர் தாக்கியுள்ளது. இதிலிருந்து மீளுவதற்கு வழி தெரியாமல் முழு நாடும் – ஏன் முழு உலகமுமே – விழி பிதுங்கி நிற்கின்றது.

இந்தப் பேரிடரைச் சமாளிப்பதற்காக – அதனை எதிர்கொண்டு அதன் வீரியத்தைக் குறைப்பதற்காக – பல நெருக்கடி கால நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வழமையான செயற்போக்குக்கு மாறான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அப்போது வெறும் சட்டத்தை மட்டும் கட்டிப் பிடித்துகக் கொண்டு விடயங்களை முன்னெடுக்க முடியாது.

மாறாக, வழமைக்கும் சட்டத்துக்கும் மாறான அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அப்படிக் கைக்கொள்ள வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது.

ஆகையால், இந்தத் தேர்தல் விடயங்கள் அனைத்தையும் சட்டம் என்ற இரும்புச் சட்டகத்துக்குள் பொருத்திப் பார்த்து, அதன் அடிப்படையில் அவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவது – எதிர்பார்ப்பது – அபத்தமாகும்.

கொரோனாத் தாக்கத்துக்கு இலக்காகியவர்கள் எவரும் அது விடயத்தில் தாங்கள் தவறிழைத்தவர்கள் அல்லர். பெரும்பாலும் அவர்களுக்குத் தெரியாமலேயே சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவர்களை மாட்டிவிட்டன. ஒவ்வொரு கணமும் தம்மை மீறிய காரணங்களால் அந்த வைரஸ் வலைக்குள் பொதுமக்கள் வீழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அப்படி வீழ்வோரை நாட்டின் சட்டமும் ஒழுங்கும் தேடிச் சென்று தனிமைப்படுத்தலை அவர்கள் மீது திணித்து விதிகக்கின்றது. நாட்டுக்கும், வைரஸ் பிடியில் சிக்காத மனித குலத்துக்கும் இந்த நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்கு வேறு வழி – மார்க்கம் – இல்லை என்பது கண்கூடு.

இவ்வாறு அசாதாரணமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயக் கடப்பாடு மனித குலத்தின் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டிருக்கும் வேளையில் அதனை ஒருபுறம் பின்பற்றியவாறு, மறுபுறம் சட்டத்தையும் ஒழுங்கையும்கூட இம்மியும் விலகாமல் கடைப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும்.

தாம் செய்யாத குற்றத்துக்காகத் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் – ஒருவர், இருவரல்லர், பல நூற்றுக்கணக்கானோரை – நமது சமூகம் – நாடு – இப்போது கொண்டிருக்கின்றது. இது விரைவில் பல்லாயிரமாக மாறும் என்பதும் தவிர்க்க முடியாத நிச்சயம்; உறுதி.

இப்படி சமூகத்திலிருந்து பல நூற்றுக் கணக்கானோரைத் தனிமைப்படுத்தி, வல்வந்தமாக ஒதுக்கி வைத் துக் கொண்டுதான் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டுள்ளன.

இப்படி பல்லாயிரம் பேரைத் தனிமையாக்கி, சமூகத்தில் பிரித்து வைத்துக் கொண்டுதான் தேர்தல் நடத்தும் நோக்கில் இப்போதைய தேர்தல் சட்டங்களும் விதி முறைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அத்தகைய சூழ்நிலையில்தான் வேட்பு மனுத்தாக்கல் ஒப்பேறியிருக்கிக்கின்றது. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டோருக்கு வேட்பு மனுத் தாக்கலில் பங்கு கொள்ள, அதில் இடம் பெறக் கூட, வாய்ப்புக் கிட்டவில்லை. தனிமைப்படுத்தப்பட்ட அவர்களால் அடுத்தவருடன் தொடர்பாடிப் பேச முடியாத நிலையில், தேர்தல் தொடர்பில் அவருக்குள்ள அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்பது உண்மையல்லவா?

ஒருபுறம் வேட்புமனு ஏற்பு; மறுபுறம் பொதுவிடுமுறை என்ற சட்ட முரண் நடைமுறையும் கூட அரங்கேறியது.

ஓர் ஆசிரியர் தேர்தலில் போட்டியிடுவது என்றால், வேட்புமனுவில் கையெழுத்திடுவதற்கு முன்னர், தமது மேலதிகாரிகளிடமிருந்து விடுப்பு அனுமதியைப் பெற வேண்டும். அதற்கு சாத்தியமே – இடமே – அளிக்காத வகையில் ஒரு பக்கம் பொதுவிடுமுறையை நடைமுறைப்படுத்திக் கொண்டு, மறுபக்கத்தில் வேட்புமனு ஏற்புக்கான காலம் முடிவடைந்து விட்டதாகக் கூறுவதும் கேலிக் கூத்தாகும்.

இப்படிப் பல குளறுபடிகளுக்கு மத்தியில்தான் தேர்தல் விவகாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆகவே, வழமைக்கு மாறான, அசாதாரணமான, பேரிடர் ஒன்று நாட்டைக் கவ்வி நிற்கையில் –

தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டமையினால் சாதாரண சட்டங்களுக்கு அமைவாகவே அதனை அணுகி நிற்போம் என்று 'பிடிச்சுறாவி' பாணியில் தேர்தல் ஆணையமோ, அதிகார வர்க்கமோ பிடிவாதம் பிடிக்கக் கூடாது.

அந்தச் சட்ட இறுக்கத்திலிருந்து வெளியே வந்து, நெகிழ்வுப் போக்கில் இந்த விடயங்களை அணுக வேண்டும். தேவைப்பட்டால், அத்தரப்புகளை அந்த வகையில் நெகிழ்வுப் போக்கில் விடயங்களை அணுக வைப்பதற்காக நீதிமன்றத்தின் தலையீட்டையாவது நாம் கோரவேண்டும்.

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

# ராஜித, பொன்சேகா கைதாகுவார்களா?

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன மற்றும் பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா ஆகியோர் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்து தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தனக்குச் சிறை வசம் புதிதல்ல எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தன்னைக் கைது செய்து, கொரோனாவைக் கட்டுப்படுத்துவது என்றால் 2 வருடம் இல்லை 5 வருடம் என்றாலும் சிறையில் இருக்கத் தயார் என்றும் தெரிவித்தார்.

நேற்று அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தன்னைக் கைதுசெய்து கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என உறுதிப்படுத்துவார்களாயின், நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக தான் சிறைச் சோறு உண்ணத் தயார் என்றும் அவர் கூறினார்.

எமது கையில் தவறொன்று நடந்து விட்டது. ஆனால் நேற்று வெளியாகியுள்ள பத்திரிகைகளில் கொரோனா தொற்றாளர்கள் குறித்து, ஜனாதிபதியும், சுகாதார தரப்பினரும் மாறுப்பட்ட கருத்துகளை முன்வைக்கின்றனர். எனவே இவ்வாறு மாறுபட்ட எண்ணிக்கையினை முன்வைக்கும் ஜனாதிபதியை சிறையில் அடைப்பார்களா எனவும் பொன்சேகா கேள்வி எழுப்பியமையுடன், எமக்கு தவறு நேர்ந்தது போன்றே, ஜனாதிபதிக்கும் தவறு நேர்ந்திருக்கலாம் என்றார். (ஐ)

# கூட்டமைப்புக்கு 20 ஆசனங்கள்!

## அடைக்கலநாதன் அதீத நம்பிக்கை



மன்னார், மார்ச் 19

எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20இற்கும் மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை நேற்றுப் புதன்கிழமை தாக்கல் செய்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் –

தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உருவாக்கபட்ட கூட்டமைப்பு தனித்துவமான வரலாற்றுத் தன்மை கொண்டது. மக்களின் ஆணை எமக்கு நிச்சயம் கிடைக்கும்.

வன்னியில் 5 ஆசனங்களை நிச்சயம் நாம் பெற்றுக் கொள்வோம். வடக்கு – கிழக்கில் 20இற்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்வோம். கூட்டமைப்பு பலவீனப்படுத்தப்படும்போது தேசியத் தலைவரின் சிந்தனையையும் பலவீனமாகும் நிலை காணப்படும்.

கூட்டமைப்பின் வெற்றிவாய்ப்பைத் தடுப்பதற்காக பல்வேறு சுயேச்சைக் குழுக்கள் வன்னியில் தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மக்களின் அரணாக கூட்டமைப்பு என்றும் செயற்படும்.

சர்வதேசம் எமக்குப் பதில்சொல்லவேண்டிய ஒரு நிலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று உருவாக்கியுள்ளது. எனவே நாம் பலமான வெற்றிவாய்ப்பைப் பெறுவோம் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

எம்மிலிருந்து பிரிந்தவர்களை கூட்டமைப்பே வெளி உலகுக்கு காட்டியிருந்தது. அந்த அங்கீகாரத்தை வைத்துக் கொண்டுதாம் பெரியவர்கள் என்று நினைத்துச்செல்பவர்கள் உண்மையிலேயே தோல்வி காண்பார்கள் – என்றார். (ஐ)

# அரசியல் அறம் மறந்த மாவை

**புருஜோத்தமன் தங்கமயில்**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான கவீந்திரன் கோடீஸ்வரன், அவர் சார்ந்திருந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை (ரெலோவை) விட்டு, சொல்லாமல் கொள்ளாமல் தமிழரசுக் கட்சியில் இணைந்திருக்கிறார். அவர் இம்முறை தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

அம்பாறை மாவட்ட வேட்பாளர் பட்டியலை இறுதி செய்யும் கூட்டத்தின் போதே, இந்த விடயம் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கு, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவால் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒரு மாவட்டத்தின் தலைமை வேட்பாளர், அதுவும் கடந்த பொதுத் தேர்தலில் தன்னை முன்னிறுத்திய கட்சிக்கு இறுதிவரை அறிவிக்காமல் விட்டுவிட்டு, இன்னொரு கட்சியின் வேட்பாளராக மாறுவது, அடிப்படை அரசியல் அறத்துக்கு முரணானது.

அதுவும், ஒரே கூட்டணிக்குள் இருக்கும் கட்சிகளுக்கிடையிலான இவ்வாறான நடவடிக்கைகள், கூட்டணி தர்மங்களுக்கும் எதிரானவை. இது, ஜனநாயகத்தின் பிற்போக்குத்தனங்களுக்கு வித்திட்டுவிடும்.

இதனை, எந்தவித குற்றவுணர்ச்சியும் இன்றி, கோடீஸ்வரன் செய்திருக்கின்றார். அதற்கு, மாவை சேனாதிராஜா இணங்கி இருக்கின்றார்.

கூட்டணியின் தர்மங்களுக்கு எதிராகச் செயற்படுவது ஒன்றும், தமிழரசுக் கட்சிக்கோ, அதன் தற்போதைய தலைவர் மாவைக்கோ புதிதல்ல. அவர்கள், அதனை ஒரு மறுக்க முடியாத கடப்பாடு மாதிரியே, செய்து வருகிறார்கள்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில், தமிழரசுக் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்த அனந்தி சசிதரனை, தமது கட்சியின் வேட்பாளராக உள்ளடக்குவதற்கு சுரேஷ் பிறேமசந்திரன் தலை



மையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். விரும்பியது.

ஆனால், தங்களது கட்சிக்கு விரோதமாகச் செயற்பட்ட ஒருவரை, பங்காளிக் கட்சியொன்று வேட்பாளராக முன்னிறுத்துவது, கூட்டணி தர்மங்களுக்கு எதிரானது என்று, அன்றைக்கு மாவை எதிர்த்தார். அதனால், கடந்த பொதுத் தேர்தலில், அனந்தி போட்டியிட முடியாமற்போனது. அதற்குப் பதிலாக, நடராஜா அனந்தராஜ் வேட்பாளராக்கப்பட்டார்.

ஆனால், பொதுத் தேர்தல் முடிந்து சில காலத்துக்குள்ளேயே, வன்னித் தேர்தல் மாவட்டத்தில், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் வெற்றியீட்டிய வைத்தியர் சிவமோகனை, தமிழரசுக் கட்சி தன்னோடு இணைந்துக் கொண்டுவிட்டது. இன்றைக்கு, முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தராகவும் அவர் மாறிவிட்டார்.

அப்போது, மாவையிடம் கூட்டணி தர்மம் பற்றிய எண்ணம் எழவே இல்லை. கிட்டத்தட்ட அவர், முதுகில் குத்தும் அரசியல் கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் கட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்.

சிவமோகனுக்கு முன்னவரான, சிவஞானம் சிறீதரனும், 2010 பொதுத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வழங்கிய ஆசனத்தில் வெற்றிபெற்று, பின்னர் தமிழரசுக் கட்சிக்கு தாவியவர்தான். இந்த வரலாற்றுப் பக்கங்களின் தொடர்ச்சியாகத்தான், கவீந்திரன் கோடீஸ்வரன் விடயத்தை இப்போது பார்க்க வேண்டியிருக்கின்றது.



கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி சொல்வதும் செய்வதும்தான் இறுதியானது என்கிற நிலை உருவாகிவிட்டது. பங்காளிக் கட்சிகளைச் சரிசமமாக நடத்த வேண்டும் என்கிற எண்ணமோ, அடிப்படை அரசியல் அறமோ அங்கு பேணப்படுவதில்லை.

பங்காளிக் கட்சிகளும் அதன் தலைமைகளும் கூட, தமது நாடாளுமன்ற ஆசனங்களைப் பாதுகாத்தால் போதுமென்கிற நிலையில், எல்லாவற்றுக்கும் இணங்கிச் செல்லத் தலைப்பட்டுவிட்டார்கள். கூட்டணி தர்மங்களுக்கு எதிரான செயற்பாடுகளைக் கண்டிக்கவோ, அதற்கு எதிராகப் போராடவோ அவர்கள் தயாராகவும் இல்லை.

**கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி சொல்வதும் செய்வதும்தான் இறுதியானது என்கிற நிலை உருவாகிவிட்டது. பங்காளிக் கட்சிகளைச் சரிசமமாக நடத்த வேண்டும் என்கிற எண்ணமோ, அடிப்படை அரசியல் அறமோ அங்கு பேணப்படுவதில்லை.**

செல்வம் அடைக்கலநாதனும் புளொட்டின் தர்மலிங்கம் சித்தார்த்தனும் வெற்றிபெறும் தரப்போடு இருக்கவே விரும்புகிறார்கள். அதைத்தாண்டி, ஆளுமையுள்ள அரசியலொன்றைச் செய்வதற்கான எந்த



எத்தனமோ தைரியமோ அவர்களிடம் இல்லை. அதனால், தமிழரசுக் கட்சியினரும் மாவையும் இவ்வாறான ஆட்டத்தை ஆடிக் கொண்டிருக்கிறார்கள்.

இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தை வைத்துக் கொண்டிருக்கும் வரை, பேணப்பட்ட குறைந்த பட்ச அறத்தைக் கூட, மாவை பின்பற்ற விரும்பவில்லை. அவர், தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தும் நபர்களால் சூழப்பட்டிருக்கிறார். தன்னுடைய வாரிசு சார்ந்து, சிந்தித்துச் செயற்படத் தொடங்கிவிட்டார். அதனால், கட்சிக்குள் தன்னுடைய பலத்தை இன்னும் இன்னும் அதிகப்படுத்துவதற்காக, அசிங்கமான அரசியலைச் செய்வதற்கும் தயங்காதவராக மாறிவிட்டார்.

தமிழரசுக் கட்சிக்குள் நடக்கும் வேட்பாளர் நியமனப் போட்டி தொடங்கி, பங்காளிக் கட்சிகளின் வெற்றி வேட்பாளர்கள் என்று நம்பப்படுபவர்களை ஆதரிப்பது வரையில், இந்த அடிப்படையிலேயே நடைபெற்று வருகின்றன.

சம்பந்தன் வயது மூப்பின் காரணமாக, தமிழரசுக் கட்சியின் உள்விவகாரங்களில் பாரிய தலையீடுகளை இப்போது செய்வதில்லை. இந்தத் தேர்தலில், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் விவகாரம், ஒருசில வேட்பாளர்களை முன்னிறுத்தியது தவிர்ந்து, அவர் பெரிய தலையீடுகளைச் செய்திருக்கவில்லை. இதனால், மாவையும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களும் தங்களது அணிகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மாத்திரமே செய்து கொண்டிருக்கிறார்கள்.

கட்சித் தலைவர் என்கிற ஒற்றைக் காரணத்தைக் கொண்டு, வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நியமனக்குழுவுக்குள் பொருத்தமில்லாத பலரையும் உள்ளடக்கியதான குற்றச்சாட்டு, அவருக்கு எதிராக எழுந்திருக்கின்றது.

தேசியப் பட்டியலுக்குள் தன்னுடைய ஆதரவு நபர்கள் முன்னிறுத்தப்பட வேண்டும் என்று மாவை காட்டிய ஆர்வத்தைச் சம்பந்தன் ஆரம்பத்திலேயே அடக்கிவிட்டார். இரண்டு தேசியப் பட்டியல் கிடைத்தால், ஒன்று திருகோணமலைக்கானது; இன்னொன்று பெண் பிரதிநிதிக்கானது என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது.



அதுவும், யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டும் பெண் வேட்பாளர்கள் தோல்வியடைந்தால், அதில் ஒருவர் கட்டாயம் தேசியப் பட்டியலில் உள்வாங்கப்படுவார். இதனால், கொழும்பிலிருந்து தேசியப்பட்டியலுக்குள் நுழைவதற்கு எத்தனித்த சட்டத்தரணி கே.வி.தவராசாவின் முயற்சிக்கும் தடை போடப்பட்டுவிட்டது. இது, மாவையை நம்பித் தேசியப் பட்டியலுக்குள் உள்நுழைய முயன்றவர்களின் தோல்வியாகக் கொள்ளப்படுகின்றது.

கடந்த முறை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த அனைவருக்கும் வேட்பாளர் நியமனங்களை வழங்குவது தொடர்பிலான முடிவும் மாவையின் நடவடிக்கைகளால் ஏற்பட்ட ஒன்று. அது சார்ந்து, பெரிய விமர்சனங்கள் இன்னமும் நீடிக்கின்றன.

ஏற்கெனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த இரண்டு பேருக்கு எதிராகத் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்புக் காணப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு வரை எழுந்திருக்கின்றது.

அவருக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்காது இருப்பது சார்ந்து, தீர்மானமொன்றை மேற்கொள்ளுமாறு மாவைக்கு வலியுறுத்தப்பட்ட போதும் ஊழல் மோசடி தொடர்பிலான ஆவணங்கள் அவருக்கு காட்டப்பட்ட போதும், அந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்குவதற்கு மாவை முடிவெடுத்திருக்கின்றார்.

அதன்மூலம், அவர், யாழ். தேர்தல் மாவட்டத்தில் நீக்கப்படலாம் என்று நம்பப்பட்ட இன்னொரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கான இடத்தையும் காப்பாற்றியிருக்கின்றார். அவர்களைக் காப்பாற்றுவதன் மூலமும் வேட்பாளர்களாக முன்னிறுத்துவதன் மூலமும், ஒரு பாரம்பரியக் கட்சியின் தலைவராக, மாவை மோசமான முன்னுதாரணமாக மாறி நிற்கிறார்.

இதனால், ஆளுமையற்றவர்களின், மோசடிக்காரர்களின் கூடாரமாகத் தமிழரசுக் கட்சி மாறுவதற்கான பாதை, அதன் தலைமைத்துவத்தாலேயே போடப்பட்டிருக்கின்றது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# பா.ஜ.கா. அரசின் செயலின்மையால் இந்தியா பேரிழப்பைச் சந்திக்கும்

## கொரோனாவை முன்னிட்டு ராகுல் காந்தி எச்சரிக்கை



புதுடில்லி, மார்ச் 19

கொரோனாவால் இந்தியா பேரிழப்பைச் சந்திக்கும் என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி எச்சரித்துள்ளார்.

இந்தியாவில் இதுவரை 152 பேர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. 3 பேர் உயிரிழந்திருக்கின்றனர். தமிழகத்தில் 2ஆவது நபருக்கு தொற்றிருப்பது உறுதியாகியிருக்கின்றது.

கர்நாடகா, டில்லி, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தலா ஒருவர் உயிரிழந்திருக்கின்றனர்.

இந்த நிலையில் விரைவான மூர்க்கத்தனம் மிக்க நடவடிக்கைகளே கொரோனா வைரஸை எதிர்கொள்வதற்குத் தேவை என்று தெரிவித்துள்ள ராகுல் காந்தி, ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி அரசின் செயல் திறனின்மை காரணமாக இந்தியா மிகப் பெரிய இழப்பைச் சந்திக்கப் போகிறது என்று எச்சரித்துள்ளார்.

தனது ருவிற்றர் பக்கத்தில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே கொரோனாவால் பாதிக்கப்பட்டு குணமாகினார் என்று வீடு செல்ல அனுமதிக்கப்பட்ட தமிழக இளைஞர் மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் தனியான மருத்துவ விடுதியில் வைத்து சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று அதிகாரிகள் கூறினர்.

மஸ்கட்டில் பணிபுரியும் காஞ்சிபுரம் பகுதியைச் சேர்ந்த பொறியாளரான குறித்த இளைஞர் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி நாடு திரும்பினார். விமான நிலையத்தில் அவரைச் சோதித்தபோது அறிகுறிகள் எதுவும் தெரியாத காரணத்தால் அவர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.


ஆனால், பின்னர் காய்ச்சல், இருமல் ஆகிய அறிகுறிகள் தென்பட்டமையால் சோதனைக்குள்ளாக்கப்பட்டார். கொரோனா வைரஸ் பாதிப்பு அவரில் இருந்தது கண்டறியப்பட்டது.


தொடர் சிகிச்சைக்குப் பின்னர் நோய் குணமாகிவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டு அவர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையிலேயே அவர் மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு கொரோனா பாதிப்பு இன்னும் இருக்கிறதா என்பதற்கான சோதனைகள் தொடங்கப்பட்டுள்ளன.

## பெருநகரத்தைவிட்டு கிராமத்துக்கு இடம்பெயர்ந்தது ஐ.ரி. நிறுவனம்

### கொரோனா நிகழ்த்திய ஆச்சரியம்





இந்தியாவில் கொரோனா அச்சத்தால் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்று பெரு நகரத்தைத் தவிர்த்து கிராமத்தின் எழில் கொஞ்சும் பகுதிக்கு நகர்ந்துள்ளது பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

கொரோனா வைரஸ் எதிரொலியாக தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்தே வேலை செய்யும்மாறு ஐ.டி. நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன. இதையடுத்து ஊழியர்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர்.

இதற்கு மாற்றாக பெங்களூரைச் சேர்ந்த இன்ஸ்டாகிளீன் என்ற நிறுவனம் தேனி மாவட்ட மலை அடிவாரத்தில், இயற்கை எழில் கொஞ்சும் கிராமம் ஒன்றில் 8 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

தேனி மாவட்டம் தேவாரம் டி.ரெங்கநாதபுரத்தை சேர்ந்த அரவிந் ராஜ' 'இன்ஸ்டாகிளீன்' என்ற செயலி உருவாக்கும் 'ஸ்டார்ட் அப்' நிறுவனத்தை பெங்களூருவில் நடத்தி வருகிறார்.

"எங்கள் நிறுவனத்தில் அமெரிக்கா, நைஜீரியா மற்றும் இலங்கையை சேர்ந்த 3 பேர் உட்பட 20 பொறியாளர்கள் பணி செய்து வந்தோம்.'

கொரோனா அச்சத்தால் எங்கள் பொறியாளர்கள் இணையம் மூலமே உணவு வரவழைத்து சாப்பிட்டு வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்தனர்.'

இந்நிலையில் பல ஐடி நிறுவனங்கள் WFH (Work From Home) என ஊழியர்களை வீட்டிலிருந்தே வேலை செய்யுமாறு அறிவித்தன. ஆனால், நாங்கள் கொஞ்சம் வித்தியாசமாக WFF (Work From Farm) என பண்ணை சூழலில் கிராமத்தில் இருந்து வேலை செய்யுமாறு அழைப்புவிடுத்திருந்தோம்.

அதற்கு எங்கள் ஊழியர்கள் அனைவரும் ஆர்வத்துடன் முன்வந்ததையடுத்து தேனியில் உள்ள எனது சொந்த பண்ணை வீட்டை அலுவலகமாக மாற்றி கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக பணியாற்றி வருகிறோம்" –என்றார்.

"நாங்கள் இங்கே எங்கள் நேரத்தை 7,8,9 என பிரித்துள்ளோம் அதாவது 7 மணி நேர வேலை, 8 மணிநேர தூக்கம், 9 மணிநேர பொழுது போக்கு (மலையேற்றம், நீச்சல்) என்று உற்சாகமாக நேரத்தை கழிக்கிறோம்"என்றும் தெரிவித்தார் அரவிந்த ராஜ'.

## பூமியை மிகச் சிறந்ததாக மாற்றும் முயற்சி தேவை

### கொரோனாவையொட்டி இந்தியப் பிரதமர் அழைப்பு



புதுடில்லி, மார்ச் 19

ஆய்வாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், தொழில்நுட்பவல்லுனர்களும் ஒன்றிணைந்து, இந்தப் பூமியை மிகச் சிறந்ததாக மாற்றும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என பிரதமர் மோடி வலியுறுத்தி உள்ளார்.

'கொரோனா' வைரஸ் தடுப்பு நடவடிக்கை குறித்து, பிரதமர் மோடியின், 'டுவிட்டர்' கணக்கில், ஏராளமானோர் பகிர்ந்த கருத்துகளுக்கு, அவர் பதில் அளித்துள்ளார்.

இத்தாலியில் இருந்து பத்திரமாக தன் மகளை அழைத்து வந்ததற்கு நன்றி தெரிவித்த ஒருவருக்கு இந்திய மக்களுக்கு எந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்கு உதவி செய்வோம் எனத் தெரிவித்தார்.

ஒரு மருத்துவர், தன் படத்தை வெளியிட்டு, 'யாரும் வீட்டை விட்டு வெளியே வராதீர்கள்' என, கேட்டுக் கொண்டுள்ளார். இதை பாராட்டிய மோடி, 'நம் பூமி பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க பாடுபடும் இதுபோன்ற மனிதர்களின் அர்ப்பணிப்பை பாராட்ட வார்த்தைகள் இல்லை' எனவும், கூறியுள்ளார்.

## நாட்டு மக்களுக்கு மோடி இன்று உரை

இந்தியாவில் கொரோனா பாதிப்பு தொடர்பாக, இன்று இரவு 8 மணிக்கு, பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

பிரதமர் அலுவலக டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், கொரோனா பாதிப்பு தொடர்பாக, இன்று இரவு 8 மணிக்கு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். அதற்கு முன்பாக உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் ஆலோசனை நடத்துகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டதான பெரிய மண் பானை கீழடியில் மீட்பு

சென்னை, மார்ச் 19

தமிழர்களின் வரலாற்று மேன்மையைப் பறைசாற்றும் சான்றாதாரங்களை அள்ளி வழங்கிவரும் தமிழகம் சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்று வரும் 6 ஆம் கட்ட அகழாய்வில் செவ்வாய்க்கிழமை சுமார் 2500 ஆண்டுகளுக்கு முந்தைய பெரிய மண்பானை கண்டெடுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவி வருவதால் மார்ச் 31ஆம் திகதி வரை கீழடியை பார்வையிட சுற்றுலா பயணிகள் யாரும் வர வேண்டாமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



திருப்புவனம் அருகே கீழடியில் ஏற்கனவே மத்திய, மாநில அரசுகள் சார்பில் நடந்த 5 கட்ட அகழாய்வுகளில் கீழடி நகர நாகரிகம் சுமார் 2,600 ஆண்டுகளுக்கு முந்தையது என தெரியவந்தது.

அதன்பின் திருப்புவனம் அருகே கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய 4 இடங்களில் 6 ஆம் கட்ட அகழாய்வுக்காக தமிழக அரசு ரூ.40 லட்சம் ஒதுக்கீடு செய்து, கடந்த பெப்ரவரி 19 இல் அகழாய்வுப் பணியை தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி தொடக்கி வைத்தார்.

கொந்தகையில் பழமையான ஈமக்காட்டில் அகழாய்வுப் பணி நடக்கிறது. இங்கு 3 குழிகள் தோண்டப்பட்டு வருகின்றன. இங்கு அதிகளவில் முதுமக்கள் தாழிகள், மண்பானைகள், குடுவைகள் கண்டறியப்பட்டன. மேலும் அகரத்தில் 2 ஏக்கா அரசு நிலத்தில் அகழாய்வுப் பணிக்காக சுத்தப்படுத்தும் பணி நடைபெறுகிறது. விரைவில் மணலூரிலும் அகழாய்வுப் பணி தொடங்கும்.

இந்நிலையில் கீழடியில் நீதியம்மாள் என்பவரின் நிலத்தில் 3 குழிகள் தோண்டப்பட்டு வருகின்றன. இங்கு செங்கல் சுவர்கள் இரண்டும், சிறிய அளவிலான மண்பானைகளும் கண்டறியப்பட்டன. மேலும் கீழடியில் தோண்டப்பட்ட ஒரு குழியிலிருந்து சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய பெரிய மண்பானை இருந்தது.

# இத்தாலியில் ஒரே நாளில் இறப்பு 475க்கு எகிறியது

## இதுவரையில் அங்கு கொரோனாவால் அங்கு 4 ஆயிரம் பேர் உயிரிழப்பு



மிலான், மார்ச் 19

இத்தாலியில் கொரோனா வைரஸால் இறந்தவர்களின் எண்ணிக்கை ஒரே நாளில் 475 அதிகரித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நோய்த் தொற்று ஏற்படத் தொடங்கியதிலிருந்து ஏற்பட்ட உயிரிழப்புக்களில் இது மிகப் பெரிய அதிகரிப்பு. அங்கு இதுவரையில் கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் இந்த நோயால் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் மொத்தம் 35,713 பேருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 4,000க்கும் மேற்பட்டவர்கள் வெற்றிகரமாக மீண்டுள்ளனர்.

மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பிராந்தியமான லோம்பார்டியில் ஒரே நாளில் 319 பேர் இறந்துள்ளனர்..

கடந்த ஆண்டு வைரஸ் சீனாவில் கண்டறியப்பட்ட பிறகு அந்த நாட்டிற்கு வெளியே உலகில் மிக மோசமான பாதிப்புக்குள்ளான நாடு இத்தாலி.

உலகில் இதுவரையில் இந்த நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்தை எட்டியுள்ளது. அவர்களில் அரைவாசிக்குச் சற்றுக் குறைவானவர்கள் சீனர்கள்.

நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 2 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அதாவது 80 வீதமானவர்கள் ஐரோப்பாவையும் மேற்கு பசிபிக் பிராந்தியத்தையும் சேர்ந்தவர்கள், இதில் ஆசியாவின் பெரும் பகுதி அடங்கும் என்று உலக சுகாதார அமைப்பு (WHO) கூறுகிறது.

நோய்ப் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகளை போர்க் கால அடிப்படையில் பல நாடுகள் எடுத்து வருகின்றபோதும் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைய நாள்களில் சடுதியாக அதிகரித்து வருகின்றது.


தனிமைப்படுத்தல், சோதித்தல், சிகிச்சையளித்தல், தேடிக் கண்டறிதல் ஆகியவை நோய்ப் பரவலைத் தடுப்பதற்கான அதி முக்கிய படிகள் என்று உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் கேபிரேயேசஸ் புதன்கிழமை தெரிவித்தார்.

எனினும் இந்த நடவடிக்கைகளால் நோய்ப் பரவலைத் தடுக்க முடிகிறதா என்பது இத்தாலியில் கேள்விக்குள்ளாகி இருக்கின்றது. அங்கு இரண்டு வாரங்களாக இயல்பு வாழ்வு முடக்கப்பட்டு மக்கள் வீடுகளின் எல்லைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்றபோதும் கடந்த நான்கு நாள்களில் மட்டும் ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். பல நூற்றுக்கணக்கானவர்கள் புதிதாக நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

ஒரு கொள்ளை நோயை எதிர்கொள்வதற்கான மருத்துவ வசதிகளின் பற்றாக்குறை உயிரிழப்புக்களின் அதிகரிப்புக்குக் காரணம் என்று சொல்லப்பட்டாலும் நாட்டில் வயதில் மூத்தவர்களின் எண்ணிக்கை அதிகளவில் இருப்பதும் ஒரு காரணம் என்கிறார் உலக சுகாதார நிறுவனத்தின் அவசரகாலப் பணிப்பாளர் மைக் ரேயன்.

தற்போதைய நெருக்கடி நிலையில் மருத்துவ வசதிகளுக்குக் காணப்படும் பற்றாக்குறைகளால் வயதில் மூத்தவர்கள் பலருக்கு சிகிச்சையளிப்பதை இத்தாலிய மருத்துவர்கள் குறைத்து வருகின்றார்கள் என்கிற உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் இப்போது தீயாகப் பரவத் தொடங்கியுள்ளன.

# உலகம் இப்போது எப்படியிருக்கிறது?



* உலகப் புகழ்பெற்ற ஈபிள் டவர் உள்ளிட்ட பாரிஸ் சுற்றுலா மையங்கள் அனைத்தும் ஆளரவமின்றி வெறிச்சோடி உள்ளன. உலக நாடுகள் அனைத்திலும் பிரபல சுற்றுலா மையங்களுக்கும் இதுவே நிலை. அந்த இடங்கள் அனைத்தும் பாலைவனங்கள் போலக் காட்சியளிக்கின்றன.

* பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரசல்ஸில் உள்ள பேரங்காடிகளில் மக்கள் மிக நீண்ட வரிசையில் நிற்கிறார்கள் பொருள்களை வாங்குவதற்காக. மக்கள் அச்சம் காரணமாக உணவுப் பொருள்களையும் கழிவறைப் பொருள்களையும் வாங்கிப் பதுக்கி வைப்பது பல நாடுகளில் வழக்கமாகிவிட்டது.

* ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மட்ரிட்டில் வாழும் மக்கள் தமது குடியிருப்புக்களில் இருந்த படியே சமையல் சட்டிகளில் தட்டி ஒலி எழுப்பும் வினோதப் போராட்டத்தை நடத்தினர். கொரோனா மருத்துவ சிகிச்சை வசதிகளுக்காக தமது நாட்டு அரசர் ஜுவான் கார்லோஸ் 100 மில்லியன் டொலர்களை அன்பளிப்புச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தியே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

* பல நாடுகள் மக்களை வீட்டுச் சிறையில் வைத்திருக்கும் அவசரகால விதிகளை அறிவித்திருக்கின்றன. அவசியத் தேவையற்று வீதிகளில் நடமாடுவதே குற்றம் என்கிற நிலை ஏற்பட்டுள்ளது.



* பிரிட்டனில் உள்ள சுரங்க ரயில்கள் எப்போதும் சனக் கூட்டத்திற்குப் பெயர் போனவை. ஆனால் இப்போது அவற்றில் பயணிப்பதற்கு ஆள்களில்லை. அல்லது ஓரிருவர் மட்டுமே பயணிக்கிறார்கள்.



* இத்தாலியின் புகழ்பெற்ற சுற்றுலா நகரமான வெனிஸில் மட்டும் கொரோனாவால் சாதகமான மாற்றம் நிகழ்ந்துள்ளது. எப்போதும் நெருக்கடியான படகுப் போக்குவரத்தால் மூழ்கடிக்கப்பட்டிருக்கும் வெனிஸ் நதி குழம்பிய குட்டையாகவே காணப்படும். இப்போது அது தெளிந்த நீரோடையாகி இருக்கிறது. சில மீன்களைக்கூட பார்க்க முடிகிற அளவிற்கு நதி நீர் தெளிவடைந்துள்ளது.

* இந்தியாவின் கேரள மாநிலத்தில் கடைக்கு வருபவர்கள் கைகளைச் சுத்தமாகிக் கொள்வதற்கும் முற்காப்பு நடவடிக்கைளை எப்படிப் பின்பற்ற வேண்டும் என்று விளக்குவதற்கும் ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.



* கொரோனாவால் முற்றிலுமாக முடங்கிப் போயிருந்த சீனா மெல்ல மெல்ல இயல்புக்குத் திரும்புகின்றது.

# கருக்கலைப்பு இனிமேலும் நியுசிலாந்தில் குற்றமில்லை

நியுசிலாந்தில் 43 வருடங்களாக நடைமுறையில் இருந்து வந்த கருக்கலைப்பைக் குற்றமாகக் கருதும் சட்டம் நீக்கப்பட்டிருக்கிறது.

பெண்கள் இனிமேல் 20 வாரங்களுக்குள் கருக்கலைப்புச் செய்து கொள்வதற்கான சுதந்திரம் இதன் மூலம் கிடைத்துள்ளது.

இதுவரையில் குற்றமாக இருந்த கருக்கலைப்பு புதிய சட்டத்தின் மூலம் குற்றமற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1977ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வந்த சட்டத்தை அகற்றுவதற்கு நாடாளுமன்றம் வாக்களித்தது. 51 உறுப்பினர்களின் ஆதரவு இருந்தாலே போதுமானது என்ற போதும் 68 உறுப்பினர்கள் இதற்கு ஆதரவளித்தனர்.

கட்சிகளின் நிலைப்பாட்டையொட்டி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை, மனச்சாட்சிப்படி வாக்களிக்கலாம் என்ற சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது.

ஒரு பெண்ணின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்று இரு மருத்துவர்கள் பரிந்துரைத்தால் மட்டுமே கருக்கலைப்புச் செய்து கொள்வதற்கு இதுவரையில் அனுமதி இருந்தது.

மக்கள் கருத்தை அறிந்து இந்தச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வது என்று நாடாளுமன்றம் முன்னர் வைத்திருந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

"இன்று முதல் கருக்கலைப்பும் ஒரு மருத்துவ சிகிச்சையாகவே கணிக்கப்படும்" என்று நீதித்துறை அமைச்சர் அன்ட்ரூ லிட்டில் தெரிவித்தார்.

புதிய சட்டத்தின் கீழ் கருத்தரித்த 20 வாரம் வரையில் தமது உடல் மற்றும் உள நலன் குறித்த சோதனைகளுக்குப் பெண்கள் தங்களை உட்படுத்தத் தேவையில்லை. கருக்கலைப்புச் சேவையை வழங்குபவர்களிடம் சென்று தேவையானபோது கருக்கலைப்புச் செய்ய முடியும். அது குறித்து உள வளத்துணைச் சேவையாளர்களுக்குத் தெரியப்படுத்தினால் போதுமானது.

# கொரோனா துளிகள்

* இன்று காலை நிலவரப்படி 2 லட்சத்து 18 ஆயிரத்து 768 பேர் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றனர். 8 ஆயிரத்து 945 பேர் உயிரிழந்துள்ளனர். 7 ஆயிரத்து 158 பேர் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றனர்.

* ஆஸ்திரேலியாவுக்குள் நுழைபவர்களை தடுப்புக் காவலில் வைத்துச் சோதிப்பதற்காக தன்சானியா தீவை தடுப்பு நிலையமாக ஒதுக்கியிருக்கிறது ஆஸ்திரேலியா.

* பியுஜி நாட்டில் முதலாவது நோயாளி கண்டறியப்பட்டுள்ளார் என்று நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

* அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கு நோய்த்தாக்கம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வைத்தியர் நந்தகுமார் தாக்கப்பட்டமைக்கு வடமாகாண சுகாதார பணிமனை கண்டனம்

## அடாவடிகளால் நோய்க்கட்டுப்பாடு பலவீனமாகும் என்கிறார் கேதீஸ்வரன்




கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்ட ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி

வைத்தியர் பரா.நந்தகுமார் தாக்கப்பட்டமையை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கண்டித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பரா. நந்தகுமார், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் த.சிவரூபன் ஆகியோர் ஐஸ்கிறீம் நிறுவனப் பணியாளர்களால் தாக்கப்பட்டனர். இது பல தரப்பினர் மத்தியிலும் பெரும் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது.

இந்நிலையிலேயே இச்சம்பவத்திற்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் நேற்றுக் கண்டனம் வெளியிட்டுள்ளார். அவரது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

திங்களன்று ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பரா. நந்தகுமார் அவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக எமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டில் இன்று நிலவி வருகின்ற அசாதாரண சூழ்நிலையில் கூட அர்ப்பணிப்புடனும் கடமையுணர்வுடனும் பணியாற்றும் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களுக்கு பொதுமக்கள் அனைவரும் அனுசரணையாக செயற்பட வேண்டிய நிலையில் இவ்வாறு நடந்தமை மனம் வருந்தத்தக்கது.

இவ்வாறான அடாவடிகள் எமது இயங்கு திறனைக் குறைத்து நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பலவீனமாக்கலாம்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பொலிஸ் திணைக்களத்தைக் கோரியுள்ளமையுடன் நெருக்கமாக அவதானித்தும் வருகின்றோம்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூசா கடற்படை முகாமில் கொரோனா சிகிச்சை பிரிவு

கொழும்பு, மார்ச் 19

கொரோனா விசேட சிகிச்சை பிரிவொன்று பூசா கடற்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ளது.

136 பேரைத் தனிமைப்படுத்திக் கண்காணிக்கக் கூடிய வகையில் இந்த பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று வெலிகந்தை வைத்தியசாலையில் கொரோனா விசேட சிகிச்சை பிரிவொன்று அமைக்கப்பட்டு வருவதாகக் குறிகூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக இராணுவ ஊடகப்பேச்சாளர், பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு, தடையின்றி சிகிச்சை வழங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் இந்தப் பிரிவில் அமைக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோர் அனுமதிக்கப்பட்டுள்ள அங்கொடை தொற்றுநோயியல் பிரிவில், இட வசதிகளுக்கு பற்றாக்குறை ஏற்படுமாயின், தொற்றுக்குள்ளானோருக்கு சிகிச்சை வழங்குவதற்காக வெலிகந்தை ஆதார வைத்தியசாலையில் விசேட பிரிவு அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## தமிழ் அரசியல் கைதிகள் விடுத்துள்ள கோரிக்கை

கொழும்பு, மார்ச் 19

அனுராதபும் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 11 பேர் கடந்த செவ்வாய் முதல் மரண தண்டனைக் கைதிகளுடன் இணைத்து விடப்பட்டுள்ளனர். இதனால் தாம் பெரும் துன்பங்களை அனுபவிக்கப்படுகின்றன எனவும், கடும் குற்றச்செயல் தண்டனை கைதிகளுக் குரிய கூடங்களில் இருந்து தம்மை மீட்டு கொழும்பு அல்லது யாழ்ப்பாணச் சிறைச்சாலைகளுக்கு அனுப்புமாறும் தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோரோனா வைரஸ் தொற்று காரணமாக அனுராதபுரம் சிறைச்சாலைக்கு வரும் புதிய கைதிகளைத் தமிழ் அரசியல் கைதிகள் இருந்த கூடங்களில் விடுகின்றனர் என கூறி தமிழ் அரசியல் கைதிகளை மரண தண்டனை கைதிகளுடன் இணைத்துவிட்டுள்ளனர்.

இதனால் அந்தக் கைதிகள் 11 பேரும் இடவசதிகள் இன்றி கடும் துன்பங்களை, சிரமங்களை அனுபவித்து வருவதாகவும், வைரஸ் தொற்று குறையும்வரை தம்மை யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு சிறைகளுக்கு அனுப்புமாறும் அவர்கள் சிறைச்சாலை நிர்வாகத்திடம் கேட்டுள்ளனர்.

ஆனால் தம்மை இடம் மாற்றாமல் மரண தண்டனைக் கைதிகளுடன் விட்டிருக்கின்றமையால் தாம் சொல்லமுடியாத துன்பத்தை எதிர்கொள்வதாகவும் தம்மை எப்படியாவது மீட்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கொரோனா தொடர்பில் விழிப்புடன் இருங்கள்!

### விஜயகலா கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 19

பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறு முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலகையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள கொரொனா வைரஸானது வடக்குப் பகுதியில் பாதிப்பை ஏற்படுத்துமேயாயின் பாரிய உயிரிழப்புக்களைச் சந்திக்க நேரிடும். ஏற்கனவே நாம் யுத்தத்தாலும் பல்வேறு இடர்களிலும் பாதிக்கப்பட்டவர்கள். எனினும் மீண்டும் அவ்வாறு அழிவை நாம் எதிர்நோக்க இடமளிக்க முடியாது. தமிழ் மக்கள் அனைவரும் கொரோனா தொற்று தொடர்பில் அரசினால் வெளியிடப்பட்டு வரும் அறிவுறுத்தலுக்கு அமைய அதனைப் பின்பற்றி பொதுவெளியில் ஒன்று கூடுவதைத் தவிர்த்து தேவையற்ற நடமாட்டங்களை குறைத்து வீடுகளில் இருக்கவேண்டும்.



யுத்தத்தினால் நாம் பல உயிர்களை இழந்து உள்ளோம். பல சொத்துக்களை இழந்து உள்ளோம். அதேபோல்தான் வைரஸானது ஒரு அழிவை ஏற்படுத்தும் நோயாக உலக நாடுகளில் பரவிவருகின்றது. எனினும் நமது தமிழ் பிரதேசங்களில் இன்று வரை எவருக்கும் கொரோனா ஏற்படவில்லை. குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் இடமிருந்து நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் . அத்தோடு சுகாதார திணைக்களத்தினால் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் அவதானமாகச் செயற்படவேண்டும் - என்றார். (ஐ)

## கிரிக்கெட் வேண்டாம்!

*சிலர் விடுமுறை வழங்கப்பட்டுள்ள தினங்களில் கிரிக்கெட் விளையாடுவதாக தகவல் கிடைத்துள்ளது. சுமார் 100 முதல் 200 பேர் வரை ஒன்று கூடி இவ்வாறு கிரிக்கெட் விளையாடுகின்றனர். பொதுமக்கள் இவ்வாறு ஒன்று கூடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்வதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*தனிமைப்படுத்தப்பட்ட நபர்களில் 19 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது. அதில் ஒருவர் இங்கிலாந்தில் இருந்து வந்தவர். ஏனைய 18 பேரும் கந்தகாடு தடுப்பு நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தவர்கள் ஆவர். அவர்கள் அனைவரும் இத்தாலியில் இருந்து வந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. விசேடமாக இவர்களில் 90 வீதமானவர்கள் இலங்கை வரும் போது அவர்களுக்கு காய்ச்சல் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஏனைய வர்களுக்கு 24 மணித்தியாலங்களில் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது - என்றார். (ஐ)*

## 12 அரசியல் கட்சிகள், 5 சுயேச்சை இதுவரை வன்னியில் வேட்புமனு

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெற வுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று காலைவரை 12 அரசியல் கட்சிகள் மற்றும் 5 சுயேச்சைக் குழுக் கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இலங்கை தமிழரசுகட்சி, தமிழ் மக் கள் தேசியக் கூட்டணி, இலங்கை சோசலிசக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், பொதுமக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஜனசெத பெரமுன, சிங்கள தீப ஜாதிக பெரமுன, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, தேசிய மக்கள்சக்தி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளும், 5 சுயேச்சை குழுக்களும் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்துள்ளனர். (ஐ)

## உதயங்க வீரதுங்கவின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 19

ரஷ்யாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படைக்கு உக்ரைனிலிருந்து மிக் ரக விமானங்களைக் கொள்வனவு செய்தபோது, முறையற்ற வகையில் தலையீடு செய்து, கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டார்.

இதனை அடுத்து பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி அவர் தாக்கல் செய்த பிணை கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தமையுடன் அவரின் விளக்கமறியல் நேற்றுவரை நீடிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று புதன்கிழமை மீண்டும் அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே உதயங்க வீரதுங்கவை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## இறக்குமதியாளர்கள் நட்டத்தை ஈடு செய்வதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, மார்ச் 19

பருப்பு மற்றும் ரின்மீன் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில், இறக்குமதியாளர்களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்களுக்கு இடையில் நேற்று புதன்கிழமை மாலை பேச்சு நடைபெற்றது.

இதற்கமைய இறக்குமதியாளர்களுக்கு ஏற்படும் இழப்பை வாராந்தம் ஈடு செய்வதற்கு இங்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முதல் அமுலாகும் வகையில், ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 65 ரூபாவாகவும் ரின்மீனின் விலை 100 ரூபாவாகவும் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பெரிய வெங்காயத்திற்கும் சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கூட்டமைப்புக்கே இந்த முறையும் வாக்களியுங்கள்!

## கடற்புலிகளின் பிரமுகர் கோரிக்கை

மன்னார், மார்ச் 19

தலைவர் காட்டித் தந்த அரசியல் என்றால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு. எனவே தமிழ் மக்களாகிய நீங்கள் இந்த முறை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என கடற்புலிகளின் முன்னாள் பிரமுகர் அச்சுதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தலைவரினால் வளர்க்கப்பட்ட நாங்கள் உட்பட தலைவரின் கட்டமைப்பை விட்டு யாருமே விலக முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒவ்வொரு தமிழனுக்குமான உரித்து.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் எங்களுக்கு வேண்டப்படாதவனும், எங்களை விற்று பிழைக்கின்ற கூட்டங்களும் இருக்கின்றன.

எனவே தமிழ் மக்களாகிய நீங்கள் இந்த முறை தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள். தலைவர் காட்டித்தந்த அரசியல் என்றால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பான எமது வீட்டை நாங்கள் உடைத்தோமாக இருந்தால் அந்த வீட்டுக்கு யாருமே உரிமை கோர முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய அனைவரிடமும் கூறினேன். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை விட்டுச் செல்வது பிழை. தலைவரின் கட்டமைப்பை அனைவரும் சேர்ந்து வழி நடத்துங்கள் என்று கேட்டேன். எல்லோரும் அண்ணனின் தியாகத்தையும், எங்களின் தியாகத்தையும் சொல்லி கதைக்கின்றார்களே தவிர அண்ணனின் வழிமுறைப்படி எங்களை வாழ்வதற்கோ அல்லது எதற்கும் விடுகின்றார்கள் இல்லை.

தமிழர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும்.

இவர்கள் இந்த முறையும் எங்களை ஏமாற்றுபவர்களாக இருந்தால் நாங்கள் இவர்களுக்கு எதிராகப் போரிடுவோம். மன்னார் மக்கள் தொடர்பில் தலைவர் ஒரு விடயத்தைச் சொன்னார்.

ஆனால் அவர் கூறியது அப்போது எனக்கு தெரியவில்லை. வன்னியில் உள்ள மக்களின் பசியை போக்கப் பொருள்களைக் கொண்டு வந்த எத்தனையோ ஆண்கள் கொல்லப்பட்டனர். அவர்களுடைய மனைவியர் விதவைகளாக உள்ளனர். அவர்களுக்கு உரிய வாழ்வாதாரம் இல்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் கட்டமைப்பு உள்ளது. வாழ்வாதாரத்துக்கான கட்டமைப்பு இல்லை. அதனை ஏற்படுத்தவேண்டும் – என்றார். (ஐ)

## ஊரடங்கு தளர்வு!

கொழும்பு, மார்ச் 1

புத்தளம், சிலாபம், கொச்சிக்கடை பகுதிகளில் அறிவிக்கப்பட்ட பொலிஸ் ஊரடங்கு சட்டம், இன்று காலை 8.00 மணிக்கு தளர்த்தப்பட்டு, மீண்டும் பிற்பகல் 2.00 மணிக்கு அமுல்படுத்தப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 4.30 மணி முதல், புத்தளத்தின் 11 பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளிலும், சிலாபத்தின் 7 பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலும் நீர்கொழும்பின் கொச்சிக்கடை பொலிஸ் பிரிவிலும் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் வேட்புமனு தாக்கல் செய்யும் நடவடிக்கையை இடையூறின்றி மேற்கொள்ளும் பொருட்டு இவ்வாறு ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள காலப் பகுதியில் அனைவரும் தங்களது வீடுகளில் தங்கியிருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள வேளையில், தமது பயணங்களை உச்சபட்சம் குறைத்துக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள காலப் பகுதியில் அந்தப் பிரதேசத்தின் ஊடாக பயணிக்கும் பொதுப் போக்குவரத்து சேவை வாகனங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கட்டுநாயக்கா விமான நிலையம் செல்லும் பயணிகள், தமது பயணச்சீட்டை ஊரடங்கு அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்த முடியும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஐ)

# கொரோனாவை கட்டுப்படுத்த சகல வழிகளிலும் நடவடிக்கை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக கொரோனா தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரான இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நோய்த் தடுப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 19 பேர் இதுவரை இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

19 பேரில் ஒருவர் இங்கிலாந்தில் இருந்து வந்தவர். ஏனைய 18 பேரும் இத்தாலியிலிருந்து வந்து கந்தகாடு மத்திய முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்களாவர்.

இவர்களின் 90 வீதமானோர் இலங்கைக்கு வரும் போதே நோய்த் தொற்றுடன் வந்தவர்கள் ஆவர். ஏனையோர் 24 மணிநேரத்தில் நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் ஆவர்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.



இதுவரை அடையாளம் காணப்பட்ட அனைவரையும் சுய தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு நாம் கேட்டுக் கொண்டுள்ளோம்.

அதற்கிணங்க, அவர்களும் செயற்படுவார்கள் என்றே நாம் நம்புகிறோம். எனினும், இந்த விடுமுறைத் தினங்களில் சிலர் ஒன்றுக் கூடி விளையாட்டுக்களில் ஈடுபடுவதாக எமக்கு அறியக்கிடைத்துள்ளது.

இவர்களிடம் நாம் தயவுசெய்து ஒன்றைக் கேட்டுக் கொள்கிறோம். முடிந்தளவு ஒன்றுக் கூடலை நிறுத்திக் கொண்டு எமக்கான ஒத்துழைப்பினை வழங்குங்கள் – என்றார். (ஐ)

## அரசியல் அறம்

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதான கட்சியொன்று, அதன் அடிப்படைகளுக்கு அப்பாலான கட்டங்களில் பயணிப்பது என்பது, அதுவும், அதன் தலைமையாலேயே அதனை நோக்கித் தள்ளப்படுவது என்பது, அபத்தமானது. அது, அந்தக் கட்சிக்குள் இருக்கும் அறமுள்ள(!) அரசியல்வாதிகளையும் இளைஞர்களையும் அரசியலில் இருந்து ஒதுங்க வைக்கும். மாறாக, பதவிகளுக்காக அலையும் துதிபாடும் அரசியலையும் அயோக்கியத்தனங்களையுமே ஊக்குவிக்கும்.

அரசியல் தலைமைத்துவம் என்பது, ஆளுமைகளின் வழியும் தார்மீகங்களின் வழியும் எழுந்துவர வேண்டும். மாறாக, துதிபாடும் அரசியலில் இருந்து எழுந்து வந்தால், அது அறங்களுக்கு அப்பாலான அனைத்துக் கட்டங்களையும் செய்ய எத்தனிக்கும். அது, முதுகில் குத்துவதில் தொடங்கி, மோசடிக்காரர்களைக் காப்பாற்றுவது வரையில் நிகழும்.

அது, தமிழ்த் தேசிய அரசியலின் சாபக்கேடாக மாறும். அவ்வாறானதொரு கட்டத்தை நோக்கி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அழைத்துச் சென்றுவிடுமோ என்பது தான், இப்போதைய பெரும் பயம். ஏனெனில், கூட்டமைப்பைத் தாண்டிய நம்பிக்கைகளை ஏற்படுத்தும் கட்சிகளோ, காட்சிகளோ தமிழ்த் தேசிய பரப்பில் இதுவரை நிகழ்ந்திருக்கவில்லை. அப்படியான கட்டத்தில், கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் அபத்தங்களை உரக்கப் பேச வேண்டியது அவசியமாகின்றது.

நன்றி: 'தமிழ் மிரர்'

# இந்தோ பசுபிக் பிராந்திய அரசியல் போட்டி நிலை இலங்கைக்குச் சீனா 50 கோடி டொலர் நிதியுதவி



கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை மையமாகக் கொண்ட இலங்கை அரசாங்கம், சீன அபிவிருத்தி வங்கியுடன் (China Development Bank) (CDB) ஐம்பது கோடி அமெரிக்க டொலர்களை நிதியுதவியாகப் பெறக் கூடிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் நேற்றுப் புதன்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பத்து ஆண்டுகள் கடன் திட்ட அடிப்படையிலேயே இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு சீன அபிவிருத்தி வங்கி நூறு கோடி டொலர் நிதியைக் கூட்டுக் கடன் (synicate loan) திட்ட அடிப்படையில் வழங்கியிருந்தது. ஆனாலும் அந்தக் கடனுக்கான கால எல்லையும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் மேலும் எட்டு ஆண்டுகள் நீடிக்கப்பட்டுள்ளன.

**இந்தியாவைக் கடந்து அமெரிக்காவுடன் உறவை ஏற்படுத்த கோட்டாபய வகுத்த உத்தி**

ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 468 கோடி ரூபாய்களுக்கான கணக்கு வாக்கெடுப்பு (Vote an Account) ஒன்று இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி நடத்தப்பட ஏற்பாடாகியிருந்தது. ஆனாலும் நிதிப் பற்றாக்குறை மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி ஆகியவற்றின் எதிர்ப்பினால் பின்னர் அது கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கணக்கு வாக்கெடுப்பு ஒன்றை இலங்கை அரசாங்கம் நடத்தக் கூடிய அளவுக்கு இந்த நிதியுதவி போதுமானதாக எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையிலேயே இந்த நிதியை சீன அபிவிருத்தி வங்கி கையளிக்கவுள்ளது.

அதற்குரிய வகையில் இந்த நிதியுதவிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்றத்தில் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் சென்ற பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 468 கோடி ரூபாய்களுக்கான கணக்கு வாக்கெடுப்பு ஒன்று நடத்த ஏற்பட்டு செய்யப்பட்டிருந்தும் பின்னர் அது வாபஸ் பெறப்பட்டிருந்தது.

பாரிய நிதி நெருக்கடி ஒன்றை இலங்கை எதிர்நோக்கியிருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜனவரி மாத இறுதியில் இலங்கை நாடாளுமன்றத்தில் கூறியுமிருந்தார்.

இந்த நிலையில் சீன அபிவிருத்தி வங்கி மூலம் பெறப்படவுள்ள ஐம்பது கோடி அமெரிக்க டொலர்கள் நிதி 2020 ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு –செலவுத் திட்டத்தின் மூலமான அபிவிருத்தி உள்ளிட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுமென இலங்கை நிதியமைச்சு கூறியுள்ளது.

அதேவேளை, அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் (Millennium Challenge Cooperation) (MCC) நாநூற்றி எண்பது மில்லியன் டொலர்களை வழங்கத் தாமாகவே முன்வந்திருந்த நிலையில் அதற்கான ஒப்பந்தம் இதுவரை கைச்சாத்திடப்படவில்லை. எனவே நம்ப வைத்து ஏமாற்றும் குழப்பமான அரசியல் அணுகுமுறையொன்றை இலங்கை அரசு கையாண்டு, தமது அரசியல் பொருளாதார நலன்களைப் பெறுவதை அமெரிக்கா அறியாமல் இருக்க வாய்ப்பில்லையெனவும் கூற முடியாது.

அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியாதென கோட்டாபய ராஜபக்ஷ சென்ற நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின்போது நேரடியாகவே கூறியிருந்தார். சஜித் பிரேமதாஸவும் அவ்வாறே சொல்லியிருந்தார். ஜே.வி.பியும் கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து ஐம்பது கோடி அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக இலங்கை அரசாங்கம் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தபோது MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி புரோக் பியேர்மன் (Brock Bierman) அவரைச் சந்தித்து உரையாடியிருந்தார்.



(11 ஆம் பக்கம் பார்க்க..)



# கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து காப்பது குறித்து வடக்கு சுற்றுலா விடுதி உரிமையாளர்களுடன் ஆலோசனை

யாழ்ப்பாணம்,மார்ச்19

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து வடமாகாணத்தில் உள்ள மக்களை பாதுகாப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக வடமாகாணத்தில் உள்ள சுற்றுலா விடுதிகளை கண்காணிப்பதும் பராமரிப்பதும் அவற்றினூடாக தகவல்களை பெற்றுக்கொள்ளவதும் அவசியமானதென கருதி கடந்த நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்களுடனான முக்கியமான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்கள், முகாமையாளர்களால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இலங்கையிலும் கொரோனா வைரஸ்ஸின் தொற்று தொடர்பிலான தகவலை அவதானிக்கும் போது வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் மற்றும் வெளிநாடு சென்று வந்தவர்கள் இந்நோய் தொற்றுக்கான பரம்பலை ஏற்படுத்தியவர்கள் என்று அவதானிக்கபட்டுள்ளது.

இதன்பொருட்டு வடமாகாணத்திற்கான நிலமைகளை கருத்திற்கொண்டு இங்கு வருகை தந்த வெளிநாட்டு பயணிகள் தொடர்பாக வடமாகாண ஆளுநரின் பணிப்புரையில் ஆளுநர் செயலகம் உரிய அமைச்சுக்கள் திணைக்களங்களூடாக பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது சுற்றுலா விடுதிகளில் தங்கி இருக்கும் வெளிநாட்டு பிரஜைகள் தமது நாடுகளுக்கு திரும்பி செல்வதையே அதிகம் விரும்புகிறார்கள். கடந்த பங்குனி முதலாம் திகதியிலிருந்து பதினைந்தாம் திகதிவரை சராசரியாக 200 வெளிநாட்டு உல்லாச பயணிகள் ஒவ்வொரு சுற்றுலா விடுதியிலும் தங்கிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கடந்த வாரங்களில் அதிக திருமணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி காரணமாகவும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர் யாழ்ப்பாணத் திற்கு வருகை தந்திருந்தனர் எனவும் அறியமுடிகின்றது.

இந்நிலையில் கொரோனா தொற்று ஏற்பட்டு 14 நாள்களுக்கு பின்னரே அதன் தாக்கம் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே விடுதிகளில் வெளிநாட்டவர்கள் தங்கியிருந்து செல்வதாலும் தொடர்ந்தும் தங்கியிருப்பதாலும் நோய்த்தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் இந்நிலையில் சுற்றுலா விடுதிகளில் வேலை செய்பவர்கள் எத்தனை பேர் தொற்றுக்கு உள்ளானார்கள் என்பது சந்தேகமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று சுற்றுலா வழிகாட்டிகளாக செயற்படுவோரிலும் எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் கேள்விகுறியாக உள்ளது. எனவே இந்த நிலமையைக் கருத்திற் கொண்டு சுற்றுலா விடுதிகளில் வேலை செய்பவர்களை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சுற்றுலா விடுதிகளிற்கு பல்வேறு நோக்கம் கருதி வருபவர்களது உடல் வெப்பநிலை பரிசோதனை செய்ய வேண்டிய தேவை இருப்பதால் அதற்கான உபகரணங்களை நியாயமான விலையில் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று சத்திர சிகிச்சையின் போது பயன்படுத்தும் முகக்கவசங்கள் வழமைக்கு மாறாக அதிக விலைக்கு விற்கப்படுவது சுட்டிகாட்டப்பட்டு அவற்றை நியாய விலையில் போதியளவு பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கபடல் வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும் தொற்று நீக்கி திரவம், சவர்காரம், கழிப்பறை காகிதாதிகள், போத்தலில் அடைக்கப்பட்ட நீர் என்பவை இவ்வாறே தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஹோட்டேல்களில் நாளாந்தம் சேரும் திண்மக் கழிவுகள் மிகவும் அதிகம் என்பதனால் அவை உரிய முறையில் தாமதமின்றி அகற்றப்பட வேண்டும், விடுதிகளில் பணியாற்றும் ஊழியர்கள் தொடர்ச்சியாக மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதை சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார திணைக்களம் ஊடாக உறுதிசெய்தல் வேண்டும் என்பன போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

ரயில் நிலையத்திலுள்ள சுற்றூலா பயணிகளுக்கான தகவல் மையம் செயல்படுவது உறுதிசெய்யப்படல் வேண்டும் எனவும் ஹொட்டேல்களில் கடந்த 01.01.2020 இலிருந்து தங்கியவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு கிராம அலுவலர் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதோடு வைரஸ் தொற்றினை இனங்காண்பதற்காக அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கும் அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றுமாறும் ஆளுநர் செயலகத்தினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## தேசியப் பட்டியலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று புதன்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதுகுறித்து விளக்கமளித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் – நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எனக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வாய்ப்பைப் பற்றி நான் ஆழமாகச் சிந்தித்தேன். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவர்களது தேசியப் பட்டியலில் எனது பெயரை உள்ளடக்குவதற்கும் முன்வந்தனர்.

இதேவேளை, எனக்கு எதிராக ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட தாக்குதல்கள் மற்றும் பிழையான தகவல்கள் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனக்குப் போட்டியிட வழங்கப்பட்ட வாய்ப்பை வாபஸ் பெற்றனர் எனவும், தேசியப் பட்டியலில் என் பெயரை சேர்த்துக் கொள்ள மறுத்தனர் எனவும் உண்மைக்கு புறம்பான செய்திகள் வலம் வருகின்றன.

உண்மை என்னவெனில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட வாய்ப்புக்கள் எதுவுமே அவர்களால் வாபஸ் பெறப்படவில்லை.

மாறாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்னும் முடிவானது முற்று முழுவதுமாக எனது முடிவேயாகும். இம்முடிவைச் சில தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையிலேயே நான் எடுத்துள்ளேன்.

அத்துடன் அரசியலில் மற்றும் பொது விடயங்களில் ஈடுபட எண்ணம் கொள்ளும் அல்லது அவ்வாறு எண்ணுவதாக நம்பப்படும் பெண்களுக்கு எதிராக பொய்யான பிரசாரங்கள் மற்றும் தனிப்பட்ட ரீதியிலான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது கவலைக்கிடமான விடயமாகும்.

ஆண் ஆதிக்கம் செறிந்த இந்தத் துறையில் பெண்களின் செயல்திறன் மிக்க மற்றும் சமமான பங்குபற்றலை தடுக்கும் வண்ணமானதாகவே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் சில ஊடக நிறுவனங்களும் ஊடக தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை புறக்கணித்து, நேர்மையான விதத்தில் சரியான செய்திகளை வெளியிடும் பணியில் இருந்து விலகி, பொய்யான மற்றும் பிழையான தகவல்களை பரப்புகின்றமை சமூகப் பொறுப்பற்ற செயலாகும்.

இத்தருணத்தில் பெண்களின் அரசியல் பிரவேசத்துக்கு ஆதரவினை வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். மேலும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் பொதுச் சேவைகளில் எனது பணி இடைவிடாது தொடரும் என உறுதியளிக்கின்றேன் – என்று கூறியுள்ளார். (ஐ)

## ரத்ன தேரரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருணாகல் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

நேற்று அவர் வேட்புமனுவில் கையொப்பமிட்டார். அத்துடன், ஜீவன் குமாரதுங்க உட்பட சுதந்திரக்கட்சியின் சில உறுப்பினர்களும் இந்தக் கட்சியில் இணைந்து போட்டியிடவுள்ளனர்.

## தேர்தலை ஒத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் ஏற்பட்டுள்ள 'கொரோனா' பேரிடரின் தாக்கம் குறித்து நன்கு உணர்ந்துள்ள சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அதன் காரணமாக தேர்தலை சட்டத்துக்கு அமைவான வகையில் தள்ளிப் போடுவதில் இணக்கம் கண்டிருப்பதாகத் தெரிகின்றது.

எனினும், இது தொடர்பில் எந்த முடிவையும் எடுக்க முன்னர் நாட்டின் நிறைவேற்று அதிகாரத்துடன் உரிய கலந்தாலோசனைகளை நடத்துவதற்கு ஆணையம் விரும்புகின்றது.

அதனடிப்படையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தேர்தல் ஆணையாளர்கள் நாளை சந்திக்க விருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

இந்தச் சந்திப்பில் தேர்தல் ஒத்திவைப்பு, அதனால் எழக்கூடிய விடயங்கள், தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட காலத்தில் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தல், தேர்தலுக்காக வேட்புமனுச் செய்தவர்களின் பாதுகாப்பு, உரிமைகள் போன்றவை குறித்தெல்லாம் விரிவாக ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல்களை இரண்டு முதல் நான்கு வாரங்கள் வரை ஒத்திவைக்கின்றமை குறித்து இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3 மாணவர்களு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் இரண்டு பெண்களுடன் ஒரு குழந்தை அடங்கும்.

இதேவேளை, கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டிருந்த இரண்டு சுற்றுலா வழிகாட்டிகளும் இப்போது படிப்படியாக குணமடைந்து வருகின்றனர். (ஐ)

# இந்தோ பசுபிக் பிராந்திய...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அப்போது இந்த நிதியுதவியைப் பெறும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு மைத்திரிபால சிறிசேன ஒப்புக் கொண்டிருந்தார். அமெரிக்கப் பின்புலத்துடன் ஜனாதிபதிப் பதவிக்கு வந்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்துள்ள நிலையில், தற்போது சீனாவுடனான இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இலங்கை அரசு என்ற கட்டமைப்பின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்றே விமர்சகர்கள் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும் நிதியுதவி, பௌத்த கலச்சார உறவுகளின் அடிப்படையில் சீனாவையும் ஈழத் தமிழ் மக்களின் எழுபது ஆண்டுகால அரசியல் போராட்டத்தையும் மேலும் சிதைக்க அமெரிக்க, இந்தியா போன்ற நாடுகளையும் கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்துகிறார் என்ற கருத்துகளும் உண்டு.

2009 ஆம் ஆண்டு ஈழத் தமிழ் இன அழிப்பில் ஈடுபட்ட தற்போதைய இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு அமெரிக்கா பயணத் தடை விதித்திருந்தது. கோட்டாபய ராஜபக்ஷவை தமது பக்கம் மேலும் சாய்க்கும் உத்தியாகவும் MCC எனப்படும் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தத்தைக் கைச்சாதிடுவதற்கான அழுத்தமாகவுமே அந்தத் தடைய நோக்க முடிந்தது.

ஆனால் அந்தத் தடைக்கு எதிரான செயற்பாடாகவும் ஈழத் தமிழர் விவகாரத்தில், இலங்கை சொல்வதையே அமெரிக்கா கேட்க வேண்டும், அல்லது இந்தியாவைக் கடந்து அமெரிக்க இலங்கையோடு அரசியல் பொருளாதார உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலும் சீன அபிவிருத்தி வங்கிக்கியுடனான இந்த ஒப்பந்தத்தை அவதானிக்க முடிகிறது.

சென்ற பெப்ரவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப் இந்தியாவுக்கு வந்து சென்ற நிலையில், அமெரிக்கா இந்தியாவுக்குக் கூட்டாளி என்ற அந்தஸ்த்தை வழங்கவுள்ளது என்பது வெளிப்படை. அவ்வாறு அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டாளியாகிவிட்டால் இந்தோ பசுபிக் பிரந்தியத்தில் அமெரிக்க ஆதிக்கம் மேலோங்கும்.

அத்துடன் இலங்கை விவகாரத்தில் இந்தியா சொல்வதையே அமெரிக்கா கேட்கும். ஆகவே இது இலங்கைக்கு ஆபத்தாக இருக்கலாம் என்று இலங்கை அரசு கருதுகின்றது. இந்த இடத்திலேதான் ஈழத் தமிழர்கள் அமெரிக்காவையும் இந்தியாவையும் கையாளக் கூடிய அரசியல் உத்திகளை வகுக்க வேண்டும்.

ஆனால் அமெரிக்காவும் இந்தியாவும் சொல்வதையே தமிழ்த் தரப்புகள் கேட்கின்றன. இருப்பினும் இலங்கை அரசாங்கத்தையும் சிங்கள அரசியல் தலைவர்களையும் சமாதானப்படுத்தக் கூடிய 13 ஆவது திருத்தச் சட்டத்தையே ஈழத் தமிழர்கள் தீர்வாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு. அதனையே இந்தியா அமெரிக்காவுக்கும் இடித்துரைக்கிறது.

ஆனால் அந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் தீர்வாக ஈழத் தமிழர்கள் ஏற்கவில்லை. எனினும் அந்தச் சட்டத்தைக் கூட நீக்க வேண்டும் என்பது கோட்டாபய ராஜபக்ஷவின் நோக்கம். அதற்காகவே இந்தியாவைக் கடந்து அமெரிக்காவோடு உறவு வைப்பதற்குச் சீனாவுடன் நெருக்கமான உறவுகளை உருவாக்குவது போன்றதொரு தோற்றப்பாட்டை இலங்கை அரசு வெளிப்படுத்துகிறது.

ஏனெனில் ஜெனீவா மனித உரிமைச் சபையின் 30/1 தீர்மானத்திலும் 13 ஆவது திருத்தச் சட்டம் அரசியல் தீர்வாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தியாவின் அழுத்தமே காரணமென இலங்கைக்கு நன்கு தெரியும். அந்தத் தீர்மானத்தில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறியதற்கும் அதுவே காரணம். ஜெனீவாவில் இருந்து அமெரிக்கா வெளியேறியதைச் சாதகமாகக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷவின் அணுகுமுறை அமைந்துள்ளதெனலாம்.

**நன்றி - கூர்மை**

# பொறுப்பற்றவர் கோட்டா!

## சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 19

கொரோனா அச்சத்தையடுத்து ஜனாதிபதி ஆற்றிய முதலாவது உரை பொறுப்பானதாக அமைந்திருக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமுள்ளது. எதிர்காலத்தில் இது இன்னும் அதிகரிக்கப்படலாம்.

இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு, அரசால் சுயமாக மாத்திரம் செயற்பட முடியாது.

இதற்காக, தேசிய அளவிலான நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அரசைத் தவிர்ந்த மற்றைய அரசியல் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு செயற்பட்டால், இதை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும் என நம்புகின்றேன்.



நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி தற்போது சிந்திப்பதை விடுத்து, நாட்டு மக்களின் உயிரையும் சுகாதாரத்தையும் பாதுகாப்பதே, தற்போதுள்ள முக்கிய தேவையாக உள்ளது.

ஜனாதிபதியின் தொலைக்காட்சி உரையாடல், பொறுப்பற்ற தன்மையாகவே காணப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்பட்டமை, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஆகியவற்றைப் பற்றி மாத்திரம் உரையாடிய அவர், இறுதியில், பருப்பு, ரின்மீன்களின் விலையைக் குறைப்பதாக அறிவித்தமை, தற்போதுள்ள சூழ்நிலைக்கு உகந்தது அல்ல.

அச்சத்தில் இருக்கும் மக்கள், பாதுகாப்புத் துறையினர், சுகாதாரப் பிரிவினருக்கு தைரியம் கொடுக்க வேண்டிய தருணத்தில், தேர்தல் பற்றி உரையாடுவது பொருத்தமானதாக இருக்கவில்லை.

ரின்மீன்கள் பல வகைகளிலும் பல கிராம், கிலோகிராம் வகைகளிலும் இருக்கும் நிலையில், எந்த ரின்மீன் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என்று ஜனாதிபதி கூறினார் என்பது விளக்கமில்லாமலே உள்ளது.

கொரோனா பாதிப்புக்கான தீர்வாக அன்றி, இது ஒரு பொதுத் தேர்தல் உறுதிமொழியாகவே காணப்படுகின்றது.

வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கடன்களை, 6 மாதங்களுக்கு வசூலிக்கவேண்டாம் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அப்படியாயின், இந்த 6 மாதத்துக்கான வாடிக்கையாளர்கள் வழங்கும் வட்டித் தொகையை, வங்கிக்கு அரசு வழங்குமா? – என்றார். (ஐ)







படங்கள்: யாழ் தீபன்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கும் இறுதி நாளான இன்று யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் சில கட்சிகள் யாழ் மாவட்ட செயலகத்தில் தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

தமிழ்த் தேசியப் பசுமை கட்சியினர் அதன் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையிலும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் அதன் செயலாளர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையிலும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் அதன் தலைமை வேட்பாளர் கனேஸ்வரன் வேலாயுதம் தலைமையிலும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

## 2 ஆயிரத்து 287 பேர் கண்காணிப்புக்குள்!

கொழும்பு, மார்ச் 19

நாடளாவிய ரீதியில் உள்ள தனிமைப்படுத்தல் முகாம்களில் 2 ஆயிரத்து 287 பேர் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க இதனைத் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்று சந்தேகத்தில் 212 பேர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 16 தனிமைப்படுத்தல், தொற்று நீக்கல் நடவடிக்கை தொடர்பிலான மருத்துவக் கண்காணிப்பு முகாம்களில் 21 வெளிநாட்டவர்கள் உட்பட 2,287 பேர் தற்போது கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 19 பேருக்கு கொரோன தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதாகவும் அவர்களில் 18 பேர் இத்தாலியிலிருந்து இருந்து வந்தவர்கள் எனவும், மற்றையவர் பிரித்தானியாவிலிருந்து வந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் இதுவரையில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 51 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெறிச்சோடிய கொழும்பு

கொழும்பு, மார்ச் 19

கொரோனா வைரஸ் அச்சம் தீவிரமாக இலங்கையில் பரவியுள்ளது.

இந்நிலையில், வாகன நெரிசல், சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் தலைநகர் கொழும்பு வெறிசோடி மனித நடமாட்டங்கள் இன்றி காணப்படுகின்றது.

அத்துடன் வாகனத் தொடரணி எதுவும் இன்றி கொழும்பு வீதிகள் வெறிச்சோடி அசாதராணமான அமைதி நிலைக்குச் சென்றுள்ளன.

நாட்டில் பரவும் கொரோனாஅச்சத்தினால் மக்கள் வெளியில் செல்லாமல் வீட்டினுள் முடங்கியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
தொடர்புகளுக்கு
விளம்பரம்
076 443 8622
விநியோகம்
076 443 8623
kalaikkathirnews@gmail.com

## பதவியிலிருந்து விலகிய மேல் மாகாண ஆளுநர்!



கொழும்பு, மார்ச் 19

மேல் மாகாண ஆளுநர் வைத்தியர் சீதா அரம்பேபொல தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் அவரது பெயர் உள்வாங்கப்பட்டுள்ளதை அடுத்து அவர் பதவி விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2020 இல் வெளியிடப்பெற்றது.